தமிழன் எக்ஸ்பிரஸ்

இதழ் : 15–24 தேதி : 01.07.2010

ஆசிரியர் : ஆர். சிவகுமார்

**TAMILAN EXPRESS**

**A The New Indian Express Group Publication**

**Marketing Offices**



**சென்னை : Madan Mohan K**
எக்ஸ்பிரஸ் கார்டன்ஸ்,
29, இரண்டாவது பிரதான சாலை,
அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை -600058.
போன் : 044-23457601. பேக்ஸ் : 044-23457619.
92824 38111 kmadanmohan@expressbuzz.com

**மதுரை : Dilip TSR**
1/2A, சாமியார் தோப்பு,
இராம்நாட் ஹைரோடு, விரகனூர், மதுரை - 625 009.
போன் : 0452-6451093/2311302.
பேக்ஸ் : 0452-2311200
92443 17035 dilip@expressbuzz.com

**கோவை : Chandrasekaran M**
110, பங்கஜ மில் ரோடு, ராமநாதபுரம்,
கோயமுத்தூர் - 641 045.
போன் : 0422- 2315251/2319766 பேக்ஸ் : 0422-2311320.
95667 00022 chandrasekharan@expressbuzz.com

**திருச்சி : Venkateswaran. L**
பாபா டவர்ஸ் 2-வது புளோர்,
24, தென்னூர் ஹைரோடு, தில்லை நகர்,
திருச்சி - 620017.
போன் : 0431- 6462882/2743492. பேக்ஸ் : 0431-2743499.
98424 41941 venkateswaran@expressbuzz.com

**திருநெல்வேலி : Abey koshy**
10/6, ஹர்ஷா காம்ப்ளெக்ஸ், 3-வது மாடி,
நார்த் பைபாஸ் சாலை,
வண்ணார்பேட்டை. திருநெல்வேலி-627003.
போன் : 0462-6455889/2501487 பேக்ஸ் : 0462-2501496.
95009 69404 abey@expressbuzz.com

**வேலூர் : Mohamed ansar. K**
20, பாலாஜி வணிக வளாகம்,
குரு தோப்பு, ஃபேஸ்-1, சத்துவாச்சாரி,
வேலூர் - 632009.
போன் : 0416-2258402 / 2258403 பேக்ஸ் : 0416-2258420.
97893 16310 mohamed@expressbuzz.com

**Delhi : Avnish Singh .. 9212443351**
Phone : 237037606. Fax : 011-51555059
avnishsingh@expressbuzz.com

**Kolkata : Aloka Kapur ..**
Phone : 22430857. Fax : 033-22435814
alokakapur@expressbuzz.com

**Mumbai : Amitabh Bishnoi .. 9223179410**
Phone : 22882996. Fax : 022-22886954
amitabh@expressbuzz.com



Printed and Published by
**R.K. JHUNJHUNWALA** on behalf of
Express Publications (Madurai) Ltd.,
at Express Press, "Express Gardens"
29, Second Main Road,
Ambattur Industrial Estate, Chennai - 600058.
**Editor: R. Sivakumar**

இண்டர்நெட் முகவரி:
http://www.tamilanexpress.com
E-mail ID : tamilanexpress@tamilanexpress.com


# "தமிழன் எக்ஸ்பிரஸ்"க்கு நன்றி"!

## -வீரப்பன் மகள் பிரபா உருக்கம்!



கடந்த இதழில் 'விரட்டியடிக்கப்பட்ட வீரப்பன் மகள்' என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டிருந்தோம். அந்த செய்தியில் நமக்குப் போட்டியளித்திருந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த திராவிட மணி மீண்டும் நம்மை கடந்த திங்கள் கிழமையன்று தொடர்பு கொண்டார். அப்போது அவர், " வீரப்பனால் பயனடைந்தவர்களும், சமூக நலத் தொண்டன் என்று சொல்லிக் கொள்பவர்களும் பிரபாவின் மேல் படிப்புக்கு உதவாத நிலையில் அந்தப் பெண்ணின் நிலையை வெளியுலகத்திற்குக் கொண்டு வந்த தமிழன் எக்ஸ்பிரஸ் இதழுக்கு நன்றி" என்றார்.

அவரிடம் மேலும் விவரங்களைக் கேட்டோம். நம்மிடம் பேசிய திராவிடமணி, "செய்தி வெளியானதும் தமிழகம் முழுவதிலிருந்து எங்கள் கட்சித் தொண்டர்களும், பொதுநல அமைப்பினரும் எங்களைத் தொடர்பு கொண்டார்கள். குறிப்பாக திருச்சி மாவட்ட விடுதலை ச் சிறுத்தைகள் செயலாளர் கட்சி கிட்டு என்னைத் தொடர்பு கொண்டு 'எஸ்.ஆர்.எம். கல்லூரி வேந்தருக்கு உண்மையிலேயே அவரது உதவியாளர்கள் வீரப்பன் மகளும் நீங்களும் சென்ற விஷயத்தை தெரியப்படுத்தவில்லையாம். அந்தப் பெண்ணின் படிப்பு செலவில் இருந்து விடுதி செலவு வரை அனைத்தையும் நானே ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் உடனே அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு கல்லூரிக்கு வாருங்கள் என்கிறார் எஸ்.ஆர். எம். வேந்தர். உடனே நீங்கள் வீரப்பன் மகளை அழைத்துக் கொண்டு கல்லூரிக் குச் சென்று வேந்தரை சந்தியுங்கள்' என்றார். உடனே நாங்கள் வேந்தரை சந்திக்கச் சென்றோம். ஆனால் அதற்கு முன்பே துணை முதல்வர் ஸ்டாலின் அவர்கள் அலுவலகத்தில் இருந்து அவர் கையொப்பமிட்ட கடிதம் ஃபேக்ஸ் மூலம் கல்லூரிக்கு வந்துள்ளது. அதில் பிரபாவுக்குக் கல்லூரியில் பயில அனைத்து உதவிகளையும் செய்யச் சொல்லிக் கடிதம் அனுப்பிய கையோடு துணை முதல்வரே கோயம்புத்தூரில் இருந்து தொலைபேசியில் வேந்தரை தொடர்பு கொண்டும் பேசியிருக்கிறார். இதை எங்களிடம் சொல்லி, கல்லூரியில் சேர்த்ததற்கான உத்தரவை நாங்கள் துணை முதல்வரிடம் நாளை அளிக்கிறோம். உங்களை துணை முதல்வர் அலுவலகத்தில் இருந்து அழைப்பார்கள் என்று எங்களின் தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றையும் வாங்கிக் கொண்டு அனுப்பினர். செம்மொழி மாநாடுக்கு முன்போ, பின்போ துணை முதல்வரின் கையால் கல்லூரி சேர்க்கைக்கான உத்தரவைப் பெற உள்ளோம். அந்தப் பெண் விரும்பியது போலவே எஸ்.ஆர்.எம். கல்லூரியில் படிக்க உதவிய தமிழன் எக்ஸ்பிரஸ் இதழுக்கு மீண்டும் நன்றி" என்றார் திராவிட மணி.

**பி.ஆர். ஏ.**

இதற்கிடையில் மறுநாள் காலை விடுதலைச் சிறுத்தைகள்கட்சி பொதுச் செயலாளர் திருமாவளவனும் எஸ்.ஆர்.எம். கல்லூரி வேந்தருடன் பேசியிருக்கிறார்.

வீரப்பன் மகள் பிரபா முத்துலட்சுமியிடம் நாம் மீண்டும் பேசினோம். அவர், "அந்தக் கல்லூரியில் படிக்க வேண்டும் என்ற என் ஆசை நிறைவேறியிருப்பதில் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். அதற்காக எனக்கு உதவி செய்த தமிழன் எக்ஸ்பிரஸுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேந்தரிடம் எனக்காக பேசிய துணை முதல்வர் அவர்களுக்கும், திருமாவளவன் அவர்களுக்கும், திருச்சி கிட்டு போன்ற அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் என் நிலைமையை அறிந்ததும் உடனே என்னை அழைத்து அனைத்து உதவிகளையும் செய்வதாக சொன்ன வேந்தருக்கும் நன்றி. இனி என் கவனம் முழுக்க படிப்பில் செலுத்தப் போகிறேன்" என்றார் சந்தோஷமாக!

படம்:வேணு